திரு. எம். பழனிமுத்து அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரையில் செவ்வனே பணியாற்றி இருக்கிறார்.

மறைவுற்ற இப்பெரியவர்களை இழந்துவிட்ட அன்னார்களது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன். இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள் - விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 61, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

61—

குலசேகரத்தில் கிளைக் கருவூலம்

*19474—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதியில் குலசேகரத்தில் ஒரு கிளைக் கருவூலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவட்டார் தொகுதியில் குலசேகரத்தில் கிளைக் கருவூலம் அமைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

(ஆ) க்கேள்வி எழ இடமில்லை.

1993 அக்டோபர் 29]

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்கு இடம் இல்லையென்று சொல்லி விட்டார்கள். பொது மக்களின் வசதிக்காக எது கேட்டாலும் இல்லையென்று சொல்லாத இந்த அரசு இப்படிச் சொன்னது வருத்தமாக இருக்கிறது. ஏனென்றால், திருவட்டார் தொகுதியில் சப்-டிரஷரி இல்லை. இது பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. என்னுடைய தொகுதி மலைப்பிரதேசம் நிறைந்தது. அப்பர் கோதையார், கோதையார், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, பார்மோர் போன்ற மலையோரப் பிரதேசங்களிலிருந்தும், அரசு அலுவலகங்களிலிருந்தும், பொது மக்கள் சப்-டிரஷரிக்கு வரவேண்டும் என்றால், தக்கலையில் உள்ள சப்-டிரெஷரிக்குத்தான் வர வேண்டும். தக்கலை, அப்பர் கோதையார், கோதையார் போன்ற இடங்களிலிருந்து 70 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் உள்ளது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி போன்ற இடங்களிலிருந்து 35, 40 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அது மட்டுமல்லாமல், தக்கலைக்கு வந்து போக வேண்டும் என்றால், மலையோரப் பிரதேசமாக இருப்பதால், அதிகமான அளவிற்கு பஸ் வசதிகள் இல்லை. எனவே, இப்படிப்பட்ட சிரமங்கள் இருப்பதால், எப்படியாவது கருணை கூர்ந்து, திருவட்டார் தொகுதியிலே உள்ள குலசேகரத்திலே ஒரு சப்-டிரெஷரியை அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருவட்டார் தொகுதி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் இதுபற்றி 2, 3 தடவை கூட விளக்கங்கள் கேட்டு, அங்கே ஒரு துணைக் கருவூலம் அமைக்க வேண்டும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களை விளக்கியிருக்கிறார்கள். 9—9—91—லே ஒரு கேள்வி கேட்டு, அப்போதே அதற்கு பதிலிறுக்கப்பட்டிருக்கிறது. பிறகு, 1992—வது ஆண்டும் வற்புறுத்தி ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். அதற்கும் பதில் தரப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு வரவு—செலவுத்திட்டத்திலே கூட வெட்டுத் தீர்மானம் 1130—ன் கீழ் கூடக் கொடுத்தார்கள். அதற்கும் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு கருவூலம் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும், அப்படி வைப்பது கூடுதல் செலவிற்குத்தான் காரணமாக அமையும் என்றும், அப்படி ஒரு அவசியம் இல்லை என்றும் ஒவ்வொரு தடவையும் விளக்கங்கள் தரப்படுகின்றன அதிகாரிகளால். அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, குறிப்பிட்டிருப்பது 15 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சென்று வரவேண்டிய அவசியம்

ஏற்படுகிறது தக்கலைக்கு என்றும், ஆகவே, அந்த அளவிலே மாற்றியமைத்தால் நல்லது என்றும் தான் திருப்பித் திருப்பிக் கேட்கிறார்கள். ஒரு கருவூலத்தை அமைக்க வேண்டுமென்றால், தொலைவை மட்டும் கணக்கில் எடுப்பதில்லை. அப்படித் தொலைவைக் கணக்கிலே எடுத்துக் கொண்டாலும் கூட வேறு பல இடங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, 15 கிலோ மீட்டர் என்பது அதிகமான தூரம் என்று எடுத்துச் சொல்வதற்கு இல்லை. மேலும் ஒரு புதிய கருவூலம் அமைக்க வேண்டும் என்றால், பக்கத்திலே இருக்கிற கருவூலங்களுடைய வேலைப் பளு அதிகமாக ஆகி, 2, 3 கருவூலங்களைப் பிரித்து, மூன்றாவது நான்காவது கருவூலமாக அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதற்கு ஏற்ற இடமாக இந்த குலசேகரம் அமைந்திருக்குமேயானால், அதைப்பற்றி கவனிக்கலாம். இந்தக் கூறுபாடுகளின் அடிப்படையிலேயும் ஆராயப்பட்டது. ஆனால், அதற்கு அவசியம் இல்லை என்று தெரிவிக்கின்ற காரணத்தாலே இப்போது குலசேகரத்தில் துணைக் கருவூலம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்றுதான் நான் சொன்னேன். வரவே வராது என்று சொல்லவில்லை. அதற்கான சாத்தியக் கூறுகள் இப்போது இருக்கிற சூழ்நிலையில் இல்லை.

திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு அவசியம் இல்லை என்று அதிகாரிகள் கூறியிருப்பதாகவும், 15 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது என்று நான் எழுதியிருப்பதாகவும் சொன்னார்கள். அது உண்மை. குலசேகரத்திலிருந்து 16 கிலோ மீட்டர் என்னுடைய தொகுதியிலே— நான்கு பக்கங்களிலும், பேச்சிப்பாறை, கோதையாறு, அப்பர் கோதையாறு, பால்மோர் போன்ற இடங்களிலிருந்து 60 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. மலையோரப் பிரதேசம். அதுமட்டுமல்லாமல், காலையிலே சப்-டிரெஷரிக்குச் சென்றால், சாயங்காலம்தான் அங்கிருந்து வெளியே வர முடியும். அந்தளவிற்கு அங்கே கூட்டமாக இருக்கிறது. வேலைப் பளு கூடுதலாக இருக்கிறது. குலசேகரத்திலே ஒரு சப்-டிரெஷரியை அமைப்பதாக இருந்தால், வேலைப்பளு குறைவாகும். பொது மக்களுக்கு வசதியாகவும் இருக்கும். அரசுக்கும் செலவு மிச்சமாகும். ஏன் என்றால், 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும் என்றால், டி.ஏ. நிறைய எடுக்கிறார்கள். காலையிலே போய் ஒரு நாள் முழுவதுமாக அதற்குச் செலவழித்து விடுகிறார்கள். இங்கு அமைப்பதால் அரசுக்கும் லாபம் இருக்கும். பொது மக்களுக்கும் வசதியாக இருக்கும். அதே போல், தக்கலையில் உள்ள சப்-டிரெஷரியிலே வேலைப்பளு குறையும். அங்கே தற்போது ஒரே கூட்டமாக இருக்கிறது. ஆகவே, கருணை கூர்ந்து தமிழக அரசு வருகின்ற ஆண்டிலாவது குலசேகரத்திலே ஒரு சப்-டிரெஷரி அமைத்துத் தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1993 அக்டோபர் 29]

முற்பகல் 10–10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி வேலைப்பளுவைப் பொறுத்தவரையிலும் அவசியம் இல்லை என்ற கருத்துத்தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தூரம் ஒன்றை மட்டுமே வைத்துக்கணக்கிட முடியாது. அந்தத் தூரமும் அதிக தூரம் இல்லை. சென்று வரலாம் என்ற அள விற்குத்தான் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லும் போதெல்லாம் ஆராயப்பட்டுத்தான் வருகின்றது. ஆனால் அதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்படுகின்ற சூழ்நிலை ஏற்படும் பொழுதுதான் கவனிக்கப்பட முடியுமே தவிர, அது இல்லாமல் ஒவ்வொரு ஊருக்கும் ஒரு கருவூலம் வேண்டும் என்ற கோரிக்கை யினுடைய அடிப்படையிலே நிறுவுவதற்கு வழிவகை இல்லை. அதற்கு அவசியம் ஏற்பட வேண்டும். அதற்கான சூழ்நிலையும் ஏற்படுதல் வேண்டும். அந்தச் சூழ்நிலையும் அவசியம் ஏற்பட்டால் அரசு கவனிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 62, திரு. பே. தர்மலிங்கம், திரு. டி. வேலையா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

62—

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஸ்கேனர் கருவி.

*9342— திரு. பே. தர்மலிங்கம், திரு. டி. வேலையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யில் ஸ்கேனர் (Scanner) கருவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் என்ல், எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,